மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் கொண்டு வருகிற சூழ்நிலையிலே தமிழ் புகுத்தப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் அறவே நீக்கப்படவில்லை. 3-வது வகுப்பிலிருந்து கடைசிவரை ஆங்கிலம் பயில ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மொழி அறிவு கெட்டுவிடாது. அப்படிப்பட்ட நிலை ஜப்பானிலும் இத்தாலியிலும் நிலவவில்லை. பெரும்பாலும் ஆங்கிலத்தை தெரிந்துகொள்ளவும், தமிழைப் புரிந்துகொள்ளவும் பாட மொழிகளைக் கொண்டு வருகிறோம். அவர்களுக்கு ஆங்கில அறிவு அறவே இல்லை என்று சொல்ல முடியாது. அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொண்டாலும் மற்ற மாநிலங்களை விடத் தரம் உயர்ந்துதான் இருக்கிறது. பத்தாவது படித்தவர்கள் ஆங்கிலம் படிக்க, எழுத, புரிந்து கொள்ள, பேச, புரிந்துகொள்ள, தமிழிலே படிக்க, எழுத, பேச புரிந்து கொள்ளக்கூடிய அத்தகைய ஆற்றல் பெற வேண்டுமென்ற நிலையிலே பாடத்திட்டங்களை அமைக்க வேண்டுமென்று இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இரண்டு மொழியிலும் அறிவு பெற்றவர்கள் ஆங்கிலத்திலே தெரிந்து கொண்டு ஆங்கிலம் தெரியாத தமிழ் மக்களுக்குத் தெரியப் படுத்த வைக்க வேண்டும். அகில இந்திய ரீதியில் ஏற்பட்டாலும் தமிழ் மாணவர்கள் பெற்றிருக்கிற ஆங்கில அறிவை வைத்துக் கொண்டு முதன்மையாக நிற்க வழி இருக்கிறது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்பொழுது ஆரம்பத்திலே இடம் கிடைக்காத காரணத்தினால் தமிழ் மீடியத்தில் சேர்ந்து கொண்டு பிறகு ஆங்கில மீடியத்திற்குப் போக வேண்டுமென்று அபிப்பிராயப்படும் மாணவர்களை அவ்வாறு மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படி மாற்றிக்கொள்ள வழியில்லை என்பதைத்தான் சொன்னேன்.

Sholayar Dam

*** 162 Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state the actual expenditure incurred till August 1967 for the construction of Sholayar Dam by the Public Works Department, and estimated cost and the probable date of completion ?**

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சோலையாறு அணை கட்டுவதற்கு 1967 ஆகஸ்ட் வரையில் பொதுப்பணித்துறை இதுவரையில் ரூ. 489 லட்சம் செலவிட்டுள்ளது. இப்பணிக்கு 966 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. இந்த அணைக்கட்டு 1969-70-ல் கட்டி முடிக்கப்படக்கூடும்.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, இந்த சோலையாறு அணைக்கு ஆரம்ப மதிப்பீடு எவ்வளவு ? ரிவைஸ்ட் எஸ்டிமேட் எவ்வளவு ? அணை முடியும்பொழுது எவ்வளவு செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சோலையாறு மதிப்பீட்டுச் செலவு ஆரம்பத்தில் ரூ. 450 இலட்சமாக இருந்தது. இப்பொழுது ரூ. 966 லட்சமாக ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த சோலையாறு அணை கட்டி முடிக்கப்பட்ட பிற்பாடு எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும் என்பதையும், பல்லடம் வட்டத்தில் எவ்வளவு ஏக்கருக்குத் தண்ணீர் பாயும் என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சோலையாறு, பெரியாறு வடிநிலங்களிலிருந்து கோளக்குடிக்குப் பயன்படுத்தும் விவரத்தின் படி 2,800 கோடி கன அடிநீர பயன்படுத்தும் நீராக இருக்கும். 240,000 ஏக்கரில் பெரும்பாலும் புன்செய் பயிருக்குப் பாசனம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். பல்லடத்தைப் பொறுத்த வரை தனியாக இல்லை.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, சோலையாறு அணையின் முடிவை எதிர்பார்த்துத்தான் பவர் ஹவுஸ் நெம்பர் 1 கட்டப்பட்டு தயாராக இருக்கிறது. அது சும்மாயிருக்கும் நிலையில், சோலையாறு அணைத் திட்டத்தைத் துரிதப்படுத்த அரசாங்கமும் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு மத்திய அரசிலிருந்து அங்கீகாரம் நமக்குக் கிடைக்கவில்லை. திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் விரைவில் கிடைத்து, 1969–70-இல் கட்டி முடிக்கப்படும் என்று அறிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : தலைவரவர்களே, சோலையாறு அணை பெரிதாகக் கட்டப்பட இருப்பது நீராறு தண்ணீர்த் தேக்கத்திற்காகத்தான் என்று நாங்கள் அறிகிறோம். ஆகையால் நீராறு அணையை விரைவில் தொடங்க ஏற்பாடுகளை அமைச்சரவர்கள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுடையவும், கேரள மாநில முதலமைச்சர் அவர்களுடையவும் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு யோசித்து முடிவு கட்டப்பட வேண்டிய விஷயம்.

திரு. எம். பூபதி : சோலையாறு அணையிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தினசரிக் கூலியாகக் கொடுக்கப்படுகிறதா? வாரக்கூலியாகக் கொடுக்கப்படுகிறதா? அல்லது மாதாந்திரக் கூலியாகக் கொடுக்கப்படுகிறதா? அங்கு வேலை செய்பவர் களுக்கு கலெக்டர் நிர்ணயிக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறதா அல்லது குறைவாகக் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொடக்கக் கேள்வியோடு இது தொடர்பு கொண்டது அல்ல. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

திரு. க.ர. நல்லசிவன் : தலைவரவர்களே, நீராறு சம்பந்தமாகக் கேரள முதலமைச்சரவர்களும், நம்முடைய முதலமைச்சரவர்களும் எப்பொழுது பேச்சு வார்த்தை நடத்த உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் பற்றி கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக் கிறது.

திரு. ரா. ராமச்சந்திரதுரை : தலைவரவர்களே, சோலையாறு அணைக்கட்டு கட்ட இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ? இந்தச் சோலையாறு அணைக்கட்டிலே உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பயன்படுத்த முன்கூட்டியே பவர் ஹவுஸ் கட்டப்பட்டு விட்டது. எனவே, ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது ? இந்த அணைக்கட்டை அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்வை யிட்டிருக்கிறார்களா ?

1968 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நேடியாகப் பார்வை யிடப்பட்டிருக்கிறது. செலவு மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாகத்தான் இதற்கு இவ்வளவு தாமதமாகிவிட்டது. அதற்கு இன்னும் அங்கீகாரம் பெறவில்லை. அமைச்சரவர்கள் இதைப் பார்த்திருக்கிறார்கள். சர்க்கார் காரியங்களுக்குச் செல்லும் பொழுது சர்க்கார் செலவிலேயே சென்றிருக்கிறார்கள்.

துரித பஸ் கண்டக்டர்கள்

* 163 வினா.—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு போக்குவரத்து துரித வண்டிகளில் கண்டக்டராகப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் எஸ். எஸ். எல். சி. வரையில் படித்திருக்க வேண்டும் அல்லது வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்கிற திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அமலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, இது அரசின் பரிசீலனையிலாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கண்டக்டர்களுக்காக இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தகுதிகளை மாற்றுவதற்கான பரிசீலனை அரசாங்கத்தின் செயற்குறிப்பில் இல்லை.

மாண்புமிகு திரு. பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து வினா எண் 164, 165 இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

கூவம் ஆறு

* 164 வினா—**என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

சென்னை நகரில் கூவம் ஆற்றில் படகுப் போக்குவரத்தினை நடத்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். சென்னை மாநகரில் கூவம் ஆற்றினைச் சுத்தமாகவும், படகுப்போக்கு வரத்திற்கு ஏற்றதாகவும் அமைக்க, ரூபாய் 118·50 லட்சம் மதிப்பிட்டுச் செலவாகும் திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது, இருநிலைகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் கீழ், ஆற்றில் மின்விசைப் படகுகளைப் பயன்படுத்தி மக்கள் போக்குவரத்துக்கும் பண்டப்போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்வதோடு, மேலும் இந்நீர் வழியில் படகு வீடுகளும் , உல்லாசப் படகுகளும் செல்வதற்கு வழிவகை செய்யலாம். இவை பற்றிய குறிப்பான செயற் குறிப்புகள் இத்திட்டம் நிறைவேறிவரும் தருணத்தில் வகுக்கப்படும்.

* 165 Q.—THIRU K. VINAYAKAM AND THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to eradicate the dirty smell emanating from the Cooum river ; and

(*b*) whether it is proposed to flush the Cooum water into the sea ?